தமராக்கி வடக்கூர் - முதற்கரை அவர்களின் ஏடுகள்

அருள்மிகு பூரணை புஷ்கலை உடனாய புலிக்கரை ஐயனார் திருவருள்.

சிவகங்கை மாவட்டம் தமராக்கி வடக்கூர் முதற்கரை ம. பெரியணனின் மகன் பெ. அழகு அம்பலம் குடும்பத்தாரிடம் உள்ள ஓலை ஆவணம் இது. ஓலைச்சுவடியைக் கொண்டு வந்து காண்பித்துத் தகவல் தந்தவர் திரு பெ. அழகு அம்பலம் அவர்களின் மகன் திரு அ.மருது மற்றும் அவரது தம்பி அ.ஜெயராஜ்.

செய்தி **–** இரு தார மக்களில் யாருக்கு மூப்பு மரியாதை என்பதே வழக்கு. பிரதிவாதியான தமராக்கி வடக்கூர் முதற்கரை ம. பெரியணன் அம்பலம் அவர்களுக்கே மூப்பு மரியாதை உரியது எனத் தீர்ப்பு கூறப்பட்டுள்ள பஞ்சாயத்தார் ஆவணம் இது.

ஓலைச்சுவடிகளின் நீளம் 22 அங்குலம். அது வைக்கப்பட்டிருந்த கொட்டானின் நீளம் 19 அங்குலம். அதனால் ஓலைச்சுவடிகள் கொட்டானுக்குள் மடித்து வைக்கப்பட்டிருந்தன. மடித்து வைக்கப்பட்டிருந்த சுவடிகளை நீட்டி நிமிர்த்தினால் ஒடிந்துவிடும் என்பதால், சுவடிகளை உள்ளது உள்ளபடியே வைத்து நீளமான பகுதியை ஒருபடமும் மடிக்கப்பட்ட பகுதியை மற்றொரு படமுமாக எடுத்துப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஏடு 1 பக்கம் 1 நீளமான பகுதி



ஏடு 1 பக்கம் 1 மடிக்கப்பட்டிருந்த பகுதி



உ

1) ஜெய ஹு அப்பிகை மீ உ௰அ (28) வ தமறாக்கி மூன்று கிறாமம் அம்பலம் இலங்க சாக்ஷிகள் அனைவோர்களையும் பஞ்சாயம் கூட்டியவறு தமறாக்கி தெக்கூரிலிருக்கும் ஆண்டியப்பன் அம்-

2) மகன் அ மகன் அம்- உள்ளிட்டார் வாதியாகவும் தமறாக்கி வடகூரிலிருக்கும் மருது அம்- மகன் பெரியணன் அம்- உள்ளிடார் பிருது வாதியாகவும் உபய வாதிகளும் பஞ்சாயத்தார்

3) கள் முன்னிலையில் வாதி அழகன் அம்- சொல்லிக் கொண்ட வாக்குமூலம் பிருது வாதி பெரியணன் அம்- வகயறா அனுபவித்து வருகிறா மூப்பு மரியாதை கரை மரியோதைகளை எங்கள்

4) பாட்டன் அனுபவித்து வந்தார். பின்னால் பிருதுவாதி அம்பலம் அனுபவித்து வருகிறார்கள் அதில் எங்களுக்கு பாகம் கிடைக்க வேனுமென்றும் குட்டி கரியிலும் நாங்கள் பிரித்து வந்

5) தோம் மத்தியில் கிடையா தென்று சொல்லி விட்டார்கள் வெத்திலைப் பாக்கும் பிரித்து கொடுத்து வந்தார்கள் அதையும் இல்லை யென்று சொல்லுகிறார்கள் வடக்கூர் பரய வளவு

6) புஞ்சையிலும் அதில் நிற்கும் புளிய மரத்திலும் பாகம் கிடைக்க வேனுமென்று சொல்லிக் கொண்டார் பிருதுவாதி பெரியணன் அம்- சொல்லிக் கொண்ட வாக்கு மூலம்

ஏடு 1 பக்கம் 2 நீளமான பகுதி



ஏடு 1 பக்கம் 2 மடிக்கப்பட்டிருந்த பகுதி



1) ஷெ மூப்பு மரியாதை கரை மரியாதை வகயறாக்களை எங்கள் முன்னோர் காலத்திலிருந்து நாங்களேதான் அனுபவித்து வருகிறோம் வாதி வகயறாவுக்கு பாத்திய மில்லை யென்றும்

2) குட்டி கரியும் வெத்திலை பாக்கும் பிரித்து கொடுக்கவில்லை யென்றும் புளிய மரத்துக்கு முன்னாடியே பஞ்சாயம் கேட்டு எனக்கு தீர்மாணம் இருக்குற தென்றும் முன் காலத்தில்

3) ஷி மரியாதை விஷயமாய் வாதி வகயறாவுடன் எங்கள் வகயறாப் பேர்கள் பஞ்சாயம் கரை யேரி நரசிங்கம் பட்டியில் பஞ்சாயம் கேட்டு தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது

4) ஷி திர்மாணத்தையும் பஞ்சாயத்தார்கள் முன்பு தாக்கல் செய்திருக்கிறேன் எனக்கு ஞாயம் கிடைக்க வேனு மென்று சொல்லி கொண்டார் உபயவாதிகளுடைய

5) வாக்கு மூலங்களையும் இருவகைப் பேர்களின் தஸ்த்தாவேசுகளையும் பார்வை யிட்டு பஞ்சாயத்தார்கள் முடிவு சொன்ன தீர்மானம் நரசிங்கம் பட்டி தீர்மாணத்தில்

6) சொல்லிய பிரகாரம் அன்று முதல் இன்று வரை மூப்பு மரியாதை கரை மரியாதைகளை மூத்த தாரத்து பிள்ளைகளான பிருதுவாதி வகயறாக்களே

ஏடு 2 பக்கம் 1 நீளமான பகுதி



ஏடு 2 பக்கம் 1 மடிக்கப்பட்டிருந்த பகுதி



உ வது ஏடு

1) அனுபவித்து வருவதால் ஷை மரியாதைகளை பிருதுவாதி அனுபவித்துக் கொள்ளும் படிக்கும் மற்ற?? பாத்தியங்களை வழக்கம் போல அவரவர்கள் அனுபவித்து வந்தபடி

2) அனுபவித்துக் கொள்ளும்படிக்கும் புளியமரத்துக்கு பிருதுவாதி பழய தீர்மாணத்தை தாக்கல் செய்யாததால் அதர்க்கு தனியாக விபகாரம் கேட்டுக் கொள்ளும்படிக்கும் வாய்தா

3) சொல்லியும் தீர்மாணம் சொல்ல பட்டிருக்கிறது இப்படிக்கு பஞ்சாயத்தார்கள்

பஞ்சாயம் மகாலிங்கம் அம்- மகன் பெரிய கருப்பன் அம்- – மா வீரனன் – S. Eluppuni Ambalam – ந … xxxx.

பாலவன்னி அம்- ப அ ஆண்யப்பன் அம்- பஞ்சாயம் பெரி—கீரல் — வீரணன் அம்- ராமன் அம்-

4) இது எளுதினது ஷை யூர் கணக்கு முத்துச்சாமி xxxx குமாரன் xxxx

ஏடு 2 பக்கம் 2

எழுத்து ஏதும் எழுதப்படவில்லை…

--------- --------- ---------

ஓலைச் சுவடி எழுதப்பட்ட நாள் - இந்த ஓலைச்சுவடி “ஜெய வருடம் ஐப்பசி மாதம் 28ஆம் நாள்” எழுதப்பட்டுள்ளது. ஜெயவருடம் என்பது 2014, 1954, 1894, 1834, …. ஆகிய வருடங்களில் வந்துள்ளது. இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அழகு மகன் பெரியணன் அம்பலம் என்பவர் அவரது 79ஆவது வயதில் 1978ஆம் வருடம் சிவலோகபதவி அடைந்துள்ளார். வயதின் அடிப்படையில் பெரியணன் அவர்கள் 1899-1900ஆம் ஆண்டு பிறந்திருக்க வேண்டும்.

இவரது 54ஆவது வயதில் இந்த ஓலைச்சுவடியானது ஜெய வருடம் ஐப்பசி மாதம் 28ஆம் நாள் (1954ஆம் வருடம் நவம்பர் மாதம் 14 அல்லது 15 தேதி) எழுதப்பட்டிருக்க வெண்டும்.

குறிப்பு - ஓலைச்சுவடியை வாசித்து ஆவணம் இதழுக்கு அளித்தவர் முனைவர் நா. வள்ளி, மேனாள் முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி. ஓலைச் சுவடியைச் சுத்தம் செய்து படம் எடுத்துச் செய்தியைத் தட்டச்சு செய்து கொடுத்தவர் காசிஸ்ரீ முனைவர் கி. காளைராசன், மேனாள் துணைப் பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி. ***நாள் -*** சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 28ஆம் நாள் (14.11.2023) செவ்வாய்கிழமை.